Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.55/2026

**Depositions of PW- 2**

| Name | திரு.எஸ்.ரகுபதி | Occupation | சார்பு ஆய்வாளர் |
|---|---|---|---|
| Father's name | சீனிவாசன் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 22nd day of May 2026.

22.05.2026

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது மல்லி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணி புரிகிறேன். கடந்த 10.08.2025ம் தேதி காலை 10.30 மணிக்கு நானும் தலைமை காவலர் 2107 எட்வின்ராஜா மற்றும் தலைமை காவலர் 152 செந்தில்குமார் ஆகியோர் மதுவிலக்கு ரோந்து சம்பந்தமாக காலை 10.30 மணிக்கு பூவநாதபுரம் விலக்கு அருகில் வைத்து பின்னர் பெயர்விலாசம் கேட்டு தெரிந்த பூவநாதபுரம் 1/21 வடபட்டி கீழூர் ஈஸ்வரன் மகன் சிவசுப்பிரமணியன் வயது 31/2025 எவ்வித அரசு அனுமதியோ உரிமமோ இன்றி விற்பனை செய்வதற்காக வைத்திருந்தவர் போலீஸ்பார்ட்டிகளாகிய எங்களை கண்டதும் ஓட முயற்சித்தவரை சந்தேகத்தின் பேரில் நிறுத்தி விசாரிக்க அவர் லாப நோக்கத்தோடு மதுபான பாட்டில்களை டாஸ்மாக் கடையில் வாங்கி வைத்து கூடுதல் விலைக்கு விற்பனை செய்ய வைத்திருந்ததாக கூறி தன் கையில் வைத்திருந்த உப்பு தாள் பையிலிருந்த

1) சுமார் 180 மிலி அளவு கொண்ட MGM Diamond XXX Rum பாட்டில்கள் 30 எண்ணம் எடுத்து தானாக எங்களிடம் ஒப்படைத்தார். அதன் பின் மேற்படி வழக்கு சொத்துக்களை கைப்பற்றி அத்தாட்சி தயார் செய்து சம்பவ இடத்தில் அருகில் உள்ள நபர்கள் யாரும் அத்தாட்சியில் போலீஸ் பார்ட்டிகாகிய நாங்களே அத்தாட்சியில்

சாட்சிகளாக கையெழுத்து செய்தோம். பின்னர் எதிரியை கைது செய்து மேற்படி வழக்கு சொத்துக்கள் மற்றும் எதிரியுடன் காவல் நிலையம் வந்து நிலைய குற்ற எண்.96/2025 பிரிவு 4(1)(C)TNP Amendment Act–ன் படி வழக்கு பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. முதல் தகவல் அறிக்கை அசலை அத்தாட்சியுடன் இணைத்து சம்பந்தப்பட்ட நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். பின்னர் 10.08.2025 ம் தேதி சாட்சிகள் தலைமை காவலர் 2107 எட்வின்ராஜா மற்றும் தலைமை காவலர் 152 செந்தில்குமார் ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 18.12.2025 அன்று மேற்படி வழக்கு சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்து பிஆர்எண்.953/2025 பெறப்பட்டது. **படிவம் 91 அசாஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. இத்துடன் எனது விசாரணையை முடித்து எதிரி மீது 26.12.2025 ம் தேதி பிரிவு 4(1)(C)TNP Amendment Act–ன் பிரகாரம் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையை 10.08.2025 அன்று பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். 26.12.2025 அன்று குற்ற இறுதி அறிக்கையும் அன்றே தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். ஆனால் மேற்படி முதல் தகவல் அறிக்கையானது காலதாமதமாக தான் இந்நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படிமுதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அன்றே புலன் விசாரணை முடிந்துள்ள நிலையில் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்வதற்கு 4 மாதங்கள் காலதாமதம் குறித்து தனிப்பட்ட காரணம் எதுவும் உள்ளதா என்றால் இல்லை. அத்தாட்சியில் எதிரியிடம் கையெழுத்து பெறப்படவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் எதிரி இருந்திருந்தால் அவரிடம் அத்தாட்சியில் கையெழுத்து பெற்றிருப்போம் என்றால் சரியல்ல. எதிரியிடம் எதிரியை சோதனை செய்வதற்கு முன்பு அவரிடம் சோதனை சம்மதம் கடிதம் பெறப்படவில்லை என்றால் சரிதான். எதிரியிடம் யாரும் மதுபானம் பெற்றதாகவோ, அல்லது அவர் யாருக்கும் மதுபானம் விற்றதாகவோ எந்தவித சாட்சியமும் இல்லை என்றால் சரிதான். எதிரியிடமிருந்து மதுவிற்றதாக பணம்எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். எதிரி சட்டவிரோதமாக மேற்படி மதுபானங்களை விற்றிருந்தால் சம்பவ இடத்தின் உரிமையார் புகார் கொடுத்திருப்பார் என்றாலும், ஆனால் இவ்வழக்கில் அவ்வாறு புகார் எதுவும்

பெறப்படவில்லை என்றால் சரிதான். எனது மேல் அதிகாரிகள் கேட்டுகொண்டதற்கிணங்க எதிரி மீது பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கு சொத்துக்கள் எதுவும் எதிரியிடமிருந்து கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. அரசு மதுபான கடை இருக்கும் பொழுது எதிரியிடமிருந்து மதுபானங்கள் வாங்க வேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் பார்வை மகஜர் மற்றும் வரைபடம் போன்ற ஆவணங்கள் தயார்செய்யப்படவில்லை என்றாலும் எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் பெறப்படவில்லை என்றாலும் சரிதான். எதிரியை கைது செய்த ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் அத்தாட்சி மட்டும் சம்பவயிடத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது. சம்பவயிடத்தில் வைத்து எதிரியை கைது செய்வதாக தெரிவித்து அவரிடம் கையெழுத்து எதுவும் பெறப்படாததால் சம்பவயிடத்தில் வைத்து அவரை கைது செய்ததாக கூறப்படுவது உண்மையான கைது இல்லை என்றால் சரியல்ல. மேற்படி கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் வழக்கு சொத்துக்கும் எதிரிக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரி அரசு மதுபானக்கடை மூடிய பின்பு எதிரி மதுபானம் விற்பதாக எந்த புகாரும் நாங்கள் பெறவில்லை என்றால் சரிதான். உண்மையில் எதிரி மதுபானம் விற்றிருந்தால் மேற்படி அரசு மதுபானக்கடை ஊழியர்களே புகார் கொடுத்திருப்பார்கள் என்றால் அவர்கள் புகார் கொடுக்க வேண்டிய அவசியமில்லை.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.